அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 17/93

பொது நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு. 07
1993, ஆகஸ்ட் மாதம் 13 ஆந் திகதி.

செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும்.

371ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் நியதிகளின்படி இலங்கை நிருவாகச் சேவையின் வகுப்பு 11 தரம் 11இலுள்ள அலுவலர்கள் வகுப்பு 11 தரம் 1க்குப் பதவியுயர்த்தப்பட்ட போது ஏற்பட்ட முரண்பாடுகளை அகற்றுதல்.

---

(1) 30.09.1971க்கும் 11.03.1977க்குமிடையே சேவையில் சேர்ந்தவர்களும், இ. நி. சே. இல் வகுப்பு 11 தரம் 11இல் 10 ஆண்டுகள் திருப்திகரமான சேவையை நிறைவு செய்தவர்களுமான அலுவலர்களின் பதவியுயர்வுத் திகதிகளை முன்னிடுதல்,

(11) அவர்களை உரிய சம்பளப் படிமுறைகளில் அமர்த்திச் சம்பள நிலுவைகள் வழங்கல்,

(111) அவர்களின் முதுநிலையை மீளாய்தல்

ஆகியவற்றின் மூலம் 371ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் நியதிகளின்படி இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு 11 தரம் 11இலுள்ள அலுவலர்கள் வகுப்பு 11 தரம் 1க்குப் பதவியுயர்த்தப்பட்டபோது ஏற்பட்ட முரண்பாடுகளை அகற்ற அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

02. இலங்கை நிருவாக சேவை வகுப்பு 11 தரம் 11இல் உறுதிப்படுத்தப்பட்ட ஓர் அலுவலர் 1981.09.29ஆந் திகதியன்றோ அதற்குப் பின்போ 10 ஆண்டுகள் திருப்திகரமான சேவையை நிறைவு செய்திருப்பதுடன், பின்வரும் தேவைகளையும் பூர்த்தி செய்திருப்பின் அவர் 10 ஆண்டுகள் திருப்திகரமான சேவையை நிறைவு செய்த நாளிலிருந்து அல்லது அத்தகைய அமர்த்தலுக்கு தம்மைத் தகைமையாக்கும் வண்ணம் இத்தேவைகளை நிறைவு செய்த நாளிலிருந்து இச் சேவையின் வகுப்பு 11 தரம் 1இல் அமர்த்தப்படுவார்.

(1) உரிய திகதியில் 1ஆம் 2ஆம் வினைத்திறன் தடைப்பரீட்சையில் தேர்ச்சி பெற்றிருத்தல் அல்லது விலக்குப் பெற்றிருத்தல் வேண்டும்.

(11) இரண்டாம் மொழியில் தேர்ச்சி பெற்றிருத்தல் அல்லது விலக்குப் பெற்றிருத்தல் வேண்டும்.

(111) அத்தகைய அமர்த்தலுக்கு தகைமை பெறுவதற்கு முந்திய 5ஆண்டுக் காலப்பகுதியின் போது சம்பள ஏற்றங்கள் அனைத்தையும் உரிய திகதியில் உழைத்திருக்க வேண்டும். அத்துடன்,

(11/) அவர் அத்தகைய அமர்த்தலுக்கு உரித்துடையவராக வருவதற்கு முந்திய 5ஆண்டு காலப்பகுதியின் போது இழைத்த குற்றம் எதற்கும் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு ஆட்பட்டிருத்தல் ஆகாது.

..2

03. மேற்குறிப்பிட்ட 2ஆம் பந்தியில் உள்ள தேவைகளைப் பூர்த்தி செய்யும் அலுவலர்களின் விண்ணப்பங்களை உரிய அமைச்சுக்களின் செயலாளர்கள் ஊடாகத் திணைக்களத் தலைவர்கள் தங்கள் விதப்புரையுடன் எனக்கு ஆற்றுப் படுத்த வேண்டும். (இச் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கும் இச் சுற்றறிக்கை யுடன் இணைத்துள்ள வடிவமைப்பு 'அ'க்கு அமையவும் விண்ணப்பங்கள் தயாரிக் கப்பட வேண்டும்.)

ஒப்பம்: எம்.டி.டி.பீரிஸ்.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.

வடிவமைப்பு 'அ' (.17/93...ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 03ஆம் பிரிவின் நியதிகளின்படி)

---

இ.நி.சே.இன் வகுப்பு 11 தரம் 11ஐயும் வகுப்பு 11 தரம் 1ஐயும் ஒன்று சேர்த்ததன் விளைவாக 29.09.1981 அல்றோ அதற்குப் பின்போ 10 ஆண்டுத் திருப்திகரமான சேவையை நிறைவு செய்த அலுவலர்களை இ.நி.சே.இன் வகுப்பு 11 தரம் 1இல் அமர்த்தலுக்கான விண்ணப்பம்.

---

<u>பகுதி 1</u>

1. (அ) அலுவலரின் பெயர்:-
   (ஆ) இ.நி.சே.இன் வகுப்பு 11 தரம் 11/வகுப்பு 111க்கு நியமனம் செய்யப்பட்ட திகதி:-
   (இ) உறுதிப்படுத்தப்பட்ட திகதி:-
   (ஈ) இப்போதைய வகுப்பு/தரம், அத்துடன் அவ்வகுப்பு/தரத்துக்கு நியமிக்கப்பட்ட திகதி:-

2. (அ) இப்போதைய பதவியும் திணைக்களமும்:-
   (ஆ) அலுவலக முகவரி:-

3. இ.நி.சே.க்கு ஆட்சேர்த்தலுக்கான வழிமுறை -

   - திறந்த போட்டிப் பரீட்சை ஊடாக
   - வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சை ஊடாக
   - திறமையின்படி பதவியுயர்த்தப்பட்டு நியமனம் வழங்கப்பட்டது ஊடாக.

   (பொருத்தமற்றதை கீறிவிடுக)

4. நீங்கள் பின்வரும் பரீட்சைகளில் தேர்ச்சி பெற்றுள்ளீர்களா? அல்லது விலக்களிக்கப்பட்டுள்ளீர்களா? அவ்வாறாயின், விபரம் தருக.

| | <u>தேர்ச்சிபெற்ற/விலக்களிக்கப்பட்ட திகதி</u> |
|---|---|
| 1ஆம் வினைத்திறன் தடைப் பரீட்சை | ---------- |
| 2ஆம் வினைத்திறன் தடைப் பரீட்சை | ---------- |
| இரண்டாம் மொழி | ---------- |

5. (அ) இ.நி.சே. வகுப்பு 11 தரம் 11/111இல் 10 ஆண்டு திருப்திகரமான சேவை முடிவடைந்த திகதி: ----------

   (ஆ) வகுப்பு 11 தரம் 1 இல் அமர்த்துதல் எதிர்பார்க்கப்படும் திகதி: ----------

6. மேலே 5(அ)இல் கொடுக்கப்பட்டுள்ள திகதியில் நீங்கள் சேவையில் உறுதி செய்யப்பட்டுள்ளீர்களா? ----------

7. நீங்கள் வகுப்பு 11 தரம் 1க்கு பதவியுயர்த்தப்படுவதற்கு உரித்துடையவராக வருவதற்கு முன்னுள்ள 5 ஆண்டு காலப்பகுதியின் போது எல்லாச் சம்பள ஏற்றங்களையும் உரிய நாளில் உழைத்துள்ளீர்களா? ----------

8. நீங்கள் பதவியுயர்வுக்கு உரித்துடையவராவதற்கு முந்திய 5 ஆண்டு காலப்பகுதியின்போது ஏதாவது குற்றம் இழைத்துள்ளதற்காக ஒழுக்காற்றுத் தண்டனைக்கு ஆட்படுத்தப்பட்டுள்ளீர்களா? ----------

9. இப்போதைய ஆண்டுச் சம்பளம்:- ----------

10. நான் மேலே 5(ஆ)இல் குறிக்கப்பட்ட திகதியன்று இ.நி.சே. வகுப்பு 11 தரம் 1இல் அமர்த்தப்படுவதற்கு உரித்துடையவன் எனவும், என்னுடைய நல்ல அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை 1 முதல் 9 வரை தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவையெனவும் வெளிப்படுத்துகிறேன்.

--------------------
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி:-

## பாகம் 11

திணைக்களத் தலைவரின் சான்றிதழ்.

இப்படிவத்தில் திரு/திருமதி/செல்வி.................. அவர்களால் வழங்கப்பட்டுள்ள விபரங்களைப் பரிசீலனை செய்து அவை சரியானவை என அறிந்து கொண்டேன் என நான் உறுதிப்படுத்துகிறேன். கடந்த.......... ஆண்டுகளின் போது அவருடைய சேவை திருப்திகரமானது. அவர்......ஆம் இலக்க.........ஆந் திகதிய அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் நிபந்தனைகளின்படி இ.நி.சே.யின் வகுப்பு 11 தரம் 1க்கு அமர்த்தப்படுவதற்கு உரித்துடையவர்.

இணைக்கப்பட்டுள்ள கடிதத்தில் தரப்பட்டுள்ள காரணங்களுக்காக இவ்விண்ணப்பத்தை விதந்துரைக்கப்பட முடியாதுள்ளேன்.

(பொருத்தமற்றதைக் கீறிவிடுக)

--------------------
திணைக்களத் தலைவரின் கையொப்பம்

திகதி:- --------------------    பதவி:- --------------------

- 4 -

## பகுதி 111

திரு/திருமதி/செல்வி.............................இ.நி.சே.
வகுப்பு 11 தரம் 1க்கு அமர்த்தப்படுவதற்கு உரித்துடையவர்/
உரித்துடையவரல்லர்.

அவரின் அமர்த்துகையை நான் விதந்துரைக்கின்றேன்/விதந்துரைக்கவில்லை.

------------------
கையொப்பம்

செயலாளர்

------------------ அமைச்